செ.வெ.எண்-67 நாள்-27.11.2019

# அரியலூர் மாவட்டத்தில் தமிழ்மொழி திட்ட செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய அலுவலகத்திற்கு நினைவு பரிசினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து அரசுத் துறை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆட்சிமொழிப் பயிலரங்கம், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 26.11.2019 மற்றும் 27.11.2019 ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலரின் பயிலரங்கத் தொடக்க உரையைத் தொடர்ந்து பயிரலங்கில் ஆட்சிமொழி வரலாறு சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள், மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், மொழிப்பயிற்சி, ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் ஆகிய ஆறு தலைப்புகளில் தமிழ் அறிஞர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், அரசு அலுவலகங்களில் அலுவலர்கள் தமிழில் கோப்புகளை கையாளவேண்டும். கையொப்பங்கள் தமிழில் இடவேண்டும். சிறப்பாக தமிழில் கோப்புகள் கையாளும் அலுவலகங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். மேலும், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் குறித்து அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

பின்னர், 2017ஆம் ஆண்டு அலுவலகத்தில் ஆட்சிமொழித் திட்ட செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ், கேடயம் வழங்கி, பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மேனாள் தமிழ்வளர்ச்சித்து துணை இயக்குநர் முனைவர்.துரை.தம்புசாமி, தமிழாசிரியர் (பணிநிறைவு) மா.தமிழ்ப்பெரியசாமி, தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் (பொ) க.சித்ரா, அகர முதலித்திட்ட இயக்குநர் (பணி நிறைவு) முனைவர்.கோ.செழியன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் சாவித்திரி, உதவி பேராசிரியர் (அரசு கலைக்கல்லூரி அரியலூர்) முனைவர்.க.தமிழ்மாறன், தலைமையாசிரியர் (அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, களரம்பட்டி) த.மாயகிருட்டிணன்,

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**